**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்**

**விருதுநகர் மாவட்டம் ( இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 74/2014** நாள்–**27.08.2024**

பி.வா.சா.3, திருமதி. நாகஜோதி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

தபசில் சொத்தை பொறுத்தவரை 3 ம் பிரதிவாதி காசி 2 ம் பிரதிவாதி வள்ளுவனுக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தை இரத்து செய்தார் என்றும் , 4 ம் பிரதிவாதி தனபாலுக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்தாரா என்றால் ஆமாம் . 3 ம் பிரதிவாதி கொடுத்த பொது அதிகாரத்தை இரத்து செய்த விபரத்தை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி 2 ம் பிரதிவாதிக்கு அறிவித்தாரா என்றால் அறிவித்தார் . அந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது அந்த சொத்துகளுக்கு நான் தான் வரி செலுத்தி வருகிறேன் . சொத்திற்கான தீர்வை செலுத்தி வருகிறேன் . சொத்துக்களின் பட்டா 4 ம் பிரதிவாதியான என் கணவர் தனபாலின் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

**7, 8 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

7,8 பிரதிவாதிகள் என் குழந்தைகள் என்றால் சரிதான் . அவர்கள் தற்போது என் பராமரிப்பில் தான் இருந்து வருகிறார்கள் . மைனர்களின் நலனுக்கும் சேர்த்துதான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான்.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

சொத்து காசி அவரது அம்மாவிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான் . சொத்துக்களை பொறுத்து காசியும் என் கணவரும் 21.09.2009 ம் தேதி ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டார்கள் என்றால் சரிதான் . அந்த கிரைய ஒப்பந்தத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது அ .வ.எண். 4/2012 வழக்கில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சிவகாசியில் நடைபெற்று வரும் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன், இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை . அந்த ஒப்பந்தம் பதிவுசெய்யப்படாத ஒப்பந்தம் என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை . 03.04.2011 அன்று என் கணவரும் 2 ம் பிரதிவாதி வள்ளுவனும் போட்ட ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . 09.04.2010 அன்று 3 ம்

பிரதிவாதி தபசில் சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . இந்த வழக்கில் வள்ளுவன் என்ன கட்சி பண்ணுகிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் எங்கள் சொத்தை அவர் சொத்து என்று வழக்கில் கூறியிருக்கிறார் . 09.04.2010 ம் தேதி போடப்பட்ட பவர் பத்திரத்தில் என் கணவர் கொடுத்த சம்மதத்தின்பேரில் பவர் பத்திரம் போடப்பட்டதாக வாசகம் அந்த பவர் பத்திரத்தில் இல்லை என்றால் தெரியாது . தபசில் சொத்து 09.04.2010 ம் தேதிய பவர் பத்திரத்தின் படி 2ம் பிரதிவாதி வள்ளுவனுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை . அந்த பவர் படி 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு இருந்ததால் தான் 3ம் பிரதிவாதி காசி 2ம் பிரதிவாதி வள்ளுவனுக்கு ஒரு சம்மத பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் தெரியாது . பவர் பத்திரம், சம்மத பத்திரத்தின் படி சொத்து வள்ளுவனுக்கு பாத்தியம் என்பதால் தான் அவர் 30.05.2011ம் தேதி 1ம் பிரதிவாதி வீரணனுக்கு ஒரு கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் தெரியாது. அந்த கிரைய ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது. ஒரு சொத்தை கிரையம் வாங்கும்போது வில்லங்கம் போட்டு பார்ப்பார்கள் என்றால் சரிதான் . என் கணவர் தபசில் சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . வில்லங்க சான்றிதழ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . 09.12.2011ம் தேதி தபசில் சொத்தை என் கணவர் காசியிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அன்றைய தினமே நாங்கள் கிரையம் போடுவதற்கு முந்தைய பத்திரம் தான் காசி வள்ளுவனுக்கு கொடுத்த பவர் ரத்து பத்திரம் என்றால் சரிதான் . என் கணவருக்கு காசி கிரையம் கொடுத்ததற்கு பின்னர் தான் பவர் பத்திரத்தை ரத்து பண்ணியதாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அனுப்பியிருப்பார் தேதி ஞாபகம் இல்லை . என் கணவருக்கு கிரையம் செய்து கொடுத்த பிறகுதான் பவர் பத்திரத்தை இரத்து செய்ததாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அதுவும் எனக்கு சரியாக தெரியாது . என்னுடைய கட்சியும் காசியின் கட்சியும் ஒன்றே தான் என்றால் சரிதான் . பொதுவாக பவர் யாருக்கு எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவருக்கு தெரிவிக்காமல் பவரை ரத்து செய்ய இயலாது என்றால் தெரியாது . காசி சொத்தை என் கணவருக்கு விற்றது சம்மந்தமாகவோ அவர் வள்ளுவனுக்கு கொடுத்த பவர் பத்திரத்தை ரத்து செய்தது

சம்மந்தமாகவோ வள்ளுவனுக்கு தெரியாது என்றால் அவருக்கு தெரியும் . காசி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை வள்ளுவன் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் இல்லை, வாங்கியுள்ளார், அதற்கான ஒப்புகை அட்டை தாக்கல் செய்துள்ளேன் . என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.12 ல் வள்ளுவன் கையொப்பம் இல்லை என்றால் அவர் மனைவி போட்டுள்ளார். அதில் 19.12.2011 ல் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.11, 12 ம் எங்களுக்கு எப்படி கிடைத்தது என்றால் காசியிடமிருந்து என் கணவர் வாங்கியுள்ளார். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும் அதை வள்ளுவன் பெற்றுக்கொண்டார் என்றும் என் கணவரின் எதிர்வழக்குரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். எதிர்வழக்குரையில் அவ்வாறு சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக சொன்னதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசல் ஆவணம் 4/2012 வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்திருப்பதாக எதிர் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான் . வா.த.சா.ஆ.7 ஆவணத்தில் முத்திரைத்தாள்கள் 16.12.2011 ம் தேதி வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 கிரைய பத்திரம் வள்ளுவன் வீரனுக்கு எழுதிகொடுத்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். அந்த பத்திரம் 19.12.2011 ம் தேதி காலை 10 லிருந்து 11 மணிக்குள் பதியப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான் . தபசில் சொத்து சம்மந்தமாக சாத்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் என் கணவர் மீதும் காசி மீதும் வள்ளுவர் வழக்கு கொடுத்திருந்தார் என்றால் தெரியாது . அவ்வாறு குற்ற வழக்கு நடந்தது என்றும் நான் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல . அ.வ.எண். 4/2012 வழக்கு ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல , தாக்கல் செய்துள்ளேன். பவர் பத்திரமும் கிரைய ஒப்பந்த பத்திரமும் ஊர்ஜிதத்தில் இருக்கிறது என்றும் என் கணவரும் காசியும் கூட்டு சேர்ந்து மோசடியாக பவரை ரத்து செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சொத்து வள்ளுவனுக்கு பாத்தியப்பட்டது என்பதை தெரிந்து கொண்டே என் கணவரும் காசியும் வள்ளுவனை மோசடி செய்யவேண்டும் என்பதற்காக பவர் ரத்து பத்திரம் உற்பத்தி செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல.

(1 ம் பிரதிவாதி தரப்பில் மேற்சொன்ன குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.)

**5 ம் பிரதிவாதி தரப்பில்  குறுக்கு விசாரணை–ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால்தட்டச்சருக்குசொல்லப்பட்டுதட்டச்சுசெய்யப்பட்டுசாட்சிக்குபடித்துக்காட்டப்பட்டு அவரால் சரிஎன ஒப்புக்கொள்ளப்பட்டுஎன்முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
ஸ்ரீவில்லிபுத்தூர்